ISSN : *2456-821X* அவையம் 1 (2) 2017 P.No. : *01 - 08*

புதிய அவையம்

## பதினெண் கீழ்க்கணக்கு அகப்பாடல்களில் இடம்பெற்றுள்ள மனிதர்களின் ஒப்பீட்டுச் சிந்தனை பகுப்பாய்வு

**முனைவர் ஆ.சந்திரன்**
*தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்*
*தூயநெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)*
*திருப்பத்தூர் வேலூர்.*

**கட்டுரை பெறப்பட்டது: *20.10.2017*** **ஏற்கப்பட்டது : *18.12.2017***

*ஒரு பொருளை இன்னொறு பொருளுடன் ஒப்பிட்டு பார்த்தல் என்பது மனித இயல்பு. இந்த ஒப்பீட்டு குணத்தை அவர்கள் இயல்பாகவே பெற்றுள்ளனர். மனதின் வெளிப்பாடாய் அமையும் இது மனிதனுக்கு மனிதன் மாறுபடுகிறது. ஏழையின் சிரிப்பில் சிலருக்கு இறைவன் காட்சியளிக்கிறான். பெண்ணின் முகம் சிலருக்கு அழகிய நிலவாய்த் தெரிகிறது. ஒருத்தருக்கு முழுநிலவின் அழகு, இருள் கவ்விய குடிசையில் பசியாற கூழ் தேடும் உழைப்பாளி சுடுசோறு நிறைந்த சட்டியின் மூடியைத் திறந்து பார்க்கும்போது அடையும் மகிழ்ச்சியை உணர்த்துகிறது. ஆறும் மலையும் ஒருத்தருக்கு பெண்ணின் அங்கங்களாய்க் காட்சியளிக்கிறதென்றால், இன்னொருத்தருக்குத் தடாகமும் இளநீரும் அந்தக் காட்சியைப் புலப்படுத்துகிறன. இவ்வாறு மன உணர்வு மனிதனுக்கு மனிதன் மாறுபடுகிறது. இத்தகைய மன உணர்வு காலம் தோறும் எவ்வாறெல்லாம் மற்றமடைந்து வந்துள்ளது என்பதை பற்றி முழுமையாக ஆராய்ந்தால் தமிழனின் சிந்தனை காலந்தோறும் எவ்வாறெல்லாம் மாற்றமடைந்து வந்துள்ளது என்பதை அறியமுடியும்.*

*அத்தகைய ஒரு முயற்சியின் முன்னோட்டமாக இக்கட்டுரை அமையும் என நம்புகிறேன்.*

*பிரபஞ்சத்திலுள்ள உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருட்களை உயர்திணை, அஃறிணை என்று பாகுபடுத்திக் காண்பது நம் தமிழ் மரபு.*

*"உயர்திணை என்மனார் மக்கள் சுட்டே*

*அஃறிணை என்மனார் அவரல பிறவே" (தொ.சொ.1)*

*மற்றும்*

*"மக்கள் தேவர் நரகர் உயர்திணை*

*மற்றுயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை" (நன். 261)*

*என்று தொல்காப்பியம் மற்றும் நன்னூல் முதலியன உயர்திணை, அஃறிணை என்ற பாகுபாடுகள் பற்றி விரிவாகக் கூறுகின்றன. நமக்குக் கிடைக்கும் பழமையாண இலக்கண நூலான தொல்காப்பியம் முதல் இன்றுவரை இச்சிந்தனை தொடர்வதைக் காலந்தோறும் உருவாகி வரும் இலக்கியங்கள் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன.*

*மனிதனின் பொருட்கள் மீதான ஒப்பீட்டுச் சிந்தனைகள் பதினெண் கீழ்க்கணக்கில் இடம்பெற்றுள்ள ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கைநிலை, கார்நாற்பது ஆகிய ஆறு அகப்பாடல்களில் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை பகுப்பாய்வு செய்கிறது இக்கட்டுரை.*

*முதலாவதாக, இப்பாடல்களிலுள்ள ஒப்பீட்டுச் சிந்தனையைத் திணை அடிப்படையில் இரண்டாகப் பிரிக்கலாம்.*

- *உயர்திணை ஒப்பீடுகள்*
- *அஃறிணை ஒப்பீடுகள்*

*பாடல்களில் உயர்திணையைச் சார்ந்த தலைவன், தலைவி, தோழி மற்றும் பிற மக்களைப் பற்றி வருணனைகளில் மக்கள், தேவர், நரகர் முதலிய உயர்திணைக்கு உரியவர்களும் உயிருள்ள, உயிரற்ற அஃறிணைக்கு உரியனவும் ஒப்பீடுகளாகப் (உவமைகளாக) பயன்படுத்தப்பட்டுள்ளன. அவை எவ்வாறு அமைந்துள்ளன என்பதை இனிப் பார்ப்போம்.*

***உயர்திணைக்கு உயர்திணையை ஒப்பீட்டுக் கூறல்***

*பாடல்களிலுள்ள ஒப்பீடுகளைப் பகுக்க உயர்திணையைச் சார்ந்த தலைவன், தோழி, தலைவி முதலியோர்ருக்கு உயர்திணைக்கு உரியவர்களும் அஃறிணைக்கு உரியனவும் ஒப்பீடுகளாகக் கூறப்பட்டுள்ளன என்பதை அறியமுடிகின்றன. அவற்றில் உயர்திணைக்கு உரியவர்கள் பற்றிய ஒப்பீடுகள் பின்வருமாறு அமைந்துள்ளன.*

*தலைவனின் நட்பிற்கு - சான்றோரின் நட்பும் (ஐ.ஐ-5), தலைவனுக்கு - கூற்றுவனும் (தி.மொ.ஐ.20), தலைவனின் மனநிலைக்கு - தலைவியைக் கண்ட மக்களின் மனமும் (தி.மா.நூ.33), தலைவனின் தோற்றத்திற்கு - வேந்தனும் (தி.மா.நூ.52), தலைவிக்கு - திருமகளும் (ஐ.ஐ.14), தலைவியின் தோற்றத்திற்கு - தெய்வமும் (ஐ.ஐ.47), தலைவியின் தோற்றத்திற்கு - நீரரமகளிர் மற்றும் உலகப்பெண்களும் (தி.மொ.ஐ.50), பரத்தையருக்கு - தெய்வமும் (ஐ.எ.48) ஒப்பீடுளாகக் கூறப்பட்டுள்ளன.*

**உயர்திணைக்கு அஃறிணையை ஒப்பீட்டுக் கூறல்**

*பாடல்களிலுள்ள தலைவன், தலைவி, தோழி முதலியோருக்கு அஃறிணைக்கு உரியன பல ஒப்புமையாகக் கூறப்பட்டுள்ளன. இந்த அஃறிணையை உயிருள்ளவை, உயிரற்றவை என்று இரண்டாகப் பிரித்துக் காணலாம்.*

**உயிருள்ளவை**

*தலைவன் மற்றும் தலைவி ஆகிய இருவரின் உடல் பற்றிய வருணனைகளில் உயிருள்ள அஃறினைக்கு உரியவை அதிக அளவில் ஒப்புமை செய்யப்பட்டுள்ளன.*

*தலைவனின் தோற்றத்திற்கு - ஆண்யானை (ஐ.எ.42), மற்றும் பெரும்புலி (தி.மா.நூ.20), பசலைப் பூத்துள்ள தலைவியின் தோளுக்கு – பீக்கம் பூ (ஐ.ஐ.20), (தி.மா.நூ.116), தலைவியின் உடலுக்கு - மாந்தளிர் (ஐ.ஐ.15), தலைவியின் தோளுக்கு - மூங்கில் (கா.நா.4), (தி.மொ.ஐ.9), தலைவியின் மேனிக்கு - இளந்தளிர் (தி.மொ.ஐ.15), தலைவியின் தோற்றத்திற்கு - மலர்க்கொடி (தி.மொ.ஐ.42), மயில் (தி.மா.நூ.5), மற்றும் பூங்கொடி (தி.மொ.ஐ..44) தலைவியின் பசலைக்கு - பீர்க்கம்பூ (தி.மொ.ஐ.47), (தி.மா.நூ.3), (கா.நா.12), தலைவியின் முகத்திற்கு - தாமரைமலர் (தி.மா.நூ.1), தலைவியின் இடைக்கு - பூங்கொம்பு (தி.மா.நூ.4, 70), தலைவியின் முலைக்கு - வேங்கை மலர் (தி.மா.நூ. 21), தலைவியின் கண்ணுக்கு - மான் (ஐ.ஐ.13), (தி.மா.நூ.44, 95), (கை.55, 59), (கா.நா.4), கயல் மீன் (தி.மா.நூ.149), மாவடு (கை.13), (கா.நா.6), மற்றும் நெய்தல் மலர் (கை.51), தலைவியின் காதணிக்கு - சுராமீன் (தி.மா.நூ.77), தோழியின் மேனிக்கு - அசோகின் இளம்தளிர் (ஐ.ஐ.44), தோழியின் தோளுக்கு - மூங்கில் (தி.மொ.ஐ.8), (தி.மா.நூ.94,103), (கை.22) தோழியின் கண்ணுக்கு - கழுநீ மலர் (தி.மொ.ஐ.8), என இந்த ஒப்புமை நீளுகின்றன.*

*இதில் நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான அம்சம் தலைவியின் உடல் பற்றி ஒப்புமையின் நீட்சியாகும்.*

***உயிரற்றவை***

*தலைவன் மற்றும் தலைவி ஆகிய இருவரின் உடல் பற்றிய வருணனைகளில் உயிரற்ற அஃறிணைக்கு உரியவையும் அதிக அளவில் ஒப்புமை செய்யப்பட்டுள்ளன.*

*தலைவனின் தோற்றத்திற்கு- ஞாயிறு (தி.மா.நூ.89), தலைவனின் மார்பிற்கு - வளமான குளம் (தி.மா.நூ.142), தலைவியின் தோற்றத்திற்கு - பாவை (ஐ.எ.47), பொன் (கா.நா .21), மற்றும் குளிர்ந்த நிலவு (கா.நா.89), தலைவியின் மேனிக்கு - பொன் (தி.மொ.ஐ.19), மற்றும் செம்மணி (தி.மொ.ஐ.47), தலைவியின் கண்ணுக்கு - வேல் (தி.மா.நூ.6, 19, 76, 80), வேற்படை (தி.மா.நூ.32), வாள் (தி.மா.நூ.112), அம்பு (கா.நா.5), மற்றும் வளமானமழை (கா.நா.21, 36), தலைவியின் பற்களுக்கு - முத்து (கா.நா.33), தலைவியின் முகத்திற்கு - திங்கள் (கா.நா.71), தலைவியின் குரலுக்கு - மணியோசை (கா.நா .13), தலைவியின் பசலைக்கு - பொன் (கை.60), தோழியின் கண்களுக்கு - வாள் (தி.மா.நூ.88), (ஐ.ஐ.28), தலைவியின் மகனுக்கு - முத்து (ஐ.எ.56), என இந்த ஒப்புமைகள் அமைந்துள்ளன. இதிலும் தலைவியின் உடல் பற்றி ஒப்புமையின் நீட்சியுடன் அமைந்துள்ளது.*

*தலைவன் தலைவி பற்றிய வருணனைகளில் தலைவியின் வருணனைக்கு அஃறிணை (உயிருள்ள/ உயிரற்ற) அதிக அளவில் ஒப்புமைப் பொருட்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.*

***அஃறிணைக்குக் கூறப்பட்டுள்ள ஒப்பீடுகள்***

*உயர்திணைக்கு உரிய தலைவன், தலைவி முதலானோர்க்கு உயர்திணை உயிருள்ள மற்றும் உயிரற்ற அஃறிணையை ஒப்பீடுசெய்துள்ளதைப் போல் உயிருள்ள மற்றும் உயிரற்ற அஃறிணைகளுக்கு உயர்திணை மற்றும் உயிருள்ள மற்றும் உயிரற்ற அஃறிணைகளை ஒப்பீடுகளாகக் கூறப்பட்டுள்ளன.*

***உயிருள்ள அஃறிணைக்கு உயர்திணையை ஒப்பீட்டுக் கூறல்***

*மரம், செடி, கொடி, மலர் முதலான உயிருள்ள அஃறிணைப் பொருட்களுக்கு உயர்திணைக்குரியவர்கள் பல இடங்களில் ஒப்பிடப்பட்டுள்ளனர்.*

*முல்லை அரும்புகளுக்கு - பற்கள் (ஐ.எ.21), (தி.மொ.ஐ.22), காந்தள் மலர்களுக்கு - கைகள் (தி.மொ.ஐ.2), வேங்கை மலர்களுக்கு - சோதிடன் (தி.மொ.ஐ.9), கோங்க மலர்களுக்கு - தாயின் முலை (தி.மா.நூ.65), காந்தளின் அரும்புகளுக்கு - பெண்ணின் மென்விரல் (தி.மா.நூ.118), குவளை*

*மலர்களுக்கு - கண்கள் (தி.மா.நூ.147), காயாம்பூக்களுக்கு – கண் மை (கா.நா.8), கருவிளம்பூவிற்கு - கண் (கா.நா.9), வெண்கடம்ப மலருக்கு - பலராமன் (கா.நா.19), கொடிக்கு - தலைவியின் வடிவம் (ஐ.ஐ.8), குருக்கத்தி செடியின் இலைக்கு - பெண்ணின் பற்கள் (தி.மொ.ஐ.21), மயிலுக்கு - நடனமாடும் மகளிர் (கா.நா.4) என உயிருள்ள அஃறிகைளுக்கு உயர்திணைக்கு உரியவர்கள் ஒப்பீடுகளாகக் கூறப்பட்டுள்ளனர்.*

***ஊயிருள்ள அஃறிணைக்கு உயிருள்ள அஃறிணையை ஒப்பீட்டுக் கூறல்***

*முருக்க அரும்புகளுக்கு - புலியின் நகம் (ஐ.ஐ.31), புன்னையின் அரும்புகளுக்கு - பல்லியின் முட்டை (ஐ.ஐ.43), வெண்காந்தளுக்கு - பாம்பின் படம் (கா.நா.11), நொச்சியின் அரும்புக்கு - நண்டின் கண் (கா.நா.39), அன்றில் பறவையின் தலைக்கு - சிவந்த பூ (ஐ.ஐ.41) என ஊயிருள்ள அஃறிணைக்கு உயிருள்ள அஃறிணைகள் ஒப்பீடுகளாகக் கூறப்பட்டுள்ளன.*

***உயிருள்ள அஃறிணைக்கு உயிரற்ற அஃறிணையை ஒப்பீட்டுக் கூறல்***

*தாமரைக்கு - நெருப்பு (ஐ.ஐ.25), தாழை மலருக்கு - வெண்ணை (ஐ.ஐ.49), வேங்கை மலருக்கு - பொான் (ஐ.எ.6), காந்தளின் அரும்பிற்கு - துடுப்பு (ஐ.எ.17), (தி.மொ.ஐ.21), கொன்றை மலருக்கு - நெருப்பு (ஐ.எ.18) மற்றும் பொன் (தி.மா.நூ.120), நெய்தல் மலருக்கு - நீலமணி (ஐ.எ.60), காயாச்செடிக்கு – கரிய மை (தி.மொ.ஐ.21), புன்னை அரும்பிற்கு - முத்துக்கள் (தி.மொ.ஐ.42), அசோக மலருக்கு - நெருப்பு (தி.மா.நூ.63), கன்னிகாமர பூவிற்கு - பொன் (தி.மா.நூ.63), முருக்கமர பூவிற்கு - நெருப்பு (தி.மா.நூ.64), தாலி (தி.மா.நூ.66), மற்றும் பவளம் (தி.மா.நூ.67), புன்கமர பூவிற்கு - நெற்பொரி (தி.மா.நூ.64), மருதநில மலருக்கு - நாணில் பூட்டிய வில் (தி.மா.நூ.131), வேங்கை மலருக்கு - பொன் (கை.10), தோன்றிப்பூவிற்கு - நெருப்பு (கா.9) மற்றும் விளக்கு (கா.26), காட்டுக்கொடியின் மலருக்கு - வரகின் பொரி (கா.25), குமிழம் பூவிற்கு - பொன்னாலான காதணி (கா.28), பறவைகளின் ஓசைக்கு - குதிரையின் கழுத்திலுள்ள மணியின் ஓசை (தி.மொ.ஐ.50), கிளிகளுக்கு - கழுத்திலுள்ள மாலை (தி.மா.நூ.73), இறந்த பாம்பிற்கு - முறுக்கிவிட்ட கயிறு (தி.மா.நூ.75), எருமைகளுக்கு இருள் (தி.மா.நூ.148) என உயிருள்ள அஃறிணைகளுக்கு உயிருள்ள அஃறிணைகளைவிட உயிரற்ற அஃறிணைகள் அதிக எண்ணிக்கையில் ஒப்பீடுகளாகக் கூறப்பட்டுள்ளன.*

***உயிரற்ற அஃறிணைக்கு உயர்திணையை ஒப்பீட்டுக் கூறல்***

*உயர்திணை மற்றும் உயிருள்ள அஃறிணைகளுக்கு உயர்திணைக்குரியவர்களை ஒப்பீடு செய்வது போல் உயிரற்ற அஃறிணைகளுக்கும் உயர்திணைக்கு உரியவர்கள் ஒப்பிடப்பட்டுள்ளனர்.*

*மேகத்திற்கு - கண்ணன் (ஐ.ஐ.1), இடிக்கு - வெஞ்சினமிக்க வேந்தர் (தி.மொ.ஐ.23), மின்னலுக்கு - எமன் (தி.மா.நூ.115), மேகத்திற்கு - வேந்தனின் சேனை (கா.20), கடல் முத்திற்கு - கண்விழி (ஐ.எ.61), இருளிற்கு - கண்ணன் (தி.மா.நூ.96), காட்டிற்கு - மகளிரின் இளம்வடிவம் (கா.22) என இவை அமைந்துள்ளன.*

**உயிரற்ற அஃறிணைக்கு உயிருள்ள அஃறிணையை ஒப்பீட்டுக் கூறல்**

*இடிக்கு - மயிலினது அகவல் (ஐ.ஐ.2), மழைத்துளிக்கு - பூந்தாது (தி.மொ.ஐ1), மேகத்திற்கு - யானை (கா.நா.12) மற்றும் ஈச்சம்பழம் (தி.மா.நூ.104), யாழிற்கு - இறால் மீன் (தி.மா.நூ.131), குதிரையின் கழுத்திலுள்ள மணியின் ஓசைக்கு - தவளையின் இரைச்சல் (ஐ.எ.23) என இந்த ஒப்பீடுகள் அமைந்துள்ளன.*

**உயிரற்ற அஃறிணைக்கு உயிரற்ற அஃறிணையை ஒப்பீட்டுக் கூறல்**

*மின்னலுக்கு - வாள் (கா.நா.13) மற்றும் வேல் (ஐ.ஐ.1), (தி.மா.நூ.93), இடிக்கு - முரசின் ஓசை (ஐ.ஐ.3), (கா.35) (தி.மா.நூ.115), கடலின் முழக்கம் (தி.மா.நூ.93), குறிஞ்சிப்பறை (கா.27), பறையொலி (கா.நா.17), மற்றும் கார்கால வரவு (ஐ.எ.18), வானவில்லிற்கு - திருமாலின் மார்பிலுள்ள மாலை (கா.நா.1), மழைத்துளிக்கு - முத்து (கா.நா.23), மாணிக்க மணிக்கு - நெருப்பு (தி.மொ.ஐ.4), அருவியின் ஓசைக்கு யாழ், குழல், முரசு ஆகியவற்றின் ஓசை (தி.மொ.ஐ.7), கடல் நீருக்கு நீலமணி (தி.மொ.ஐ.47), அருவிக்கு - போர்க்கொடியில் கட்டிய வெண்சீலை (தி.மா.நூ.79), முரசின் ஓசை (கை.5), மற்றும் வெள்ளாடை (தி.மா.நூ.6), பழிச்சொற்களுக்கு - மழை (தி.மா.நூ.41), சூரியக் கதிருக்கு - நெருப்பு (தி.ம.நூ.69). திங்களுக்கு - பாலின் நிறம் (தி.மா.நூ.96), தேரொலிக்கு - காட்டாற்று ஓசை (கா.நா.10) ஆகியன ஒப்பீடுகளாகக் கூறப்பட்டுள்ளன.*

*உயிரற்ற அஃறிணைகளுக்கு உயர்திணைக்கு உரியவர்கள், உயிருள்ள அஃறிணைக்கு உரியவை ஆகியவற்றைக் காட்டிலும் உயிரற்ற அஃறிணைக்கு உரியவை சற்று அதிக அளவில் ஒப்புமை செய்யப்பட்டுள்ளன.*

**ஒப்பீடுகளின் அமைப்பு**

*பதினெண்கீழ்கணக்கில் இடம்பெற்றுள்ள அகப்பாடல்களில் உள்ள ஒப்பீடுகளைப் பகுப்பாய்வு செய்யும் போது மேற்கண்டவாறு அவை அமைந்துள்ளதை அறிய முடிகின்றன.*

*அவை உயர்திணை ஒப்பீடுகள், உயிருள்ள அஃறிணை ஒப்பீடுகள், உயிரற்ற அஃறிணை ஒப்பீடுகள் என அமைந்துள்ளதை அறியமுடிகிறது. அவற்றின் ஒப்பீடுகளின் எண்ணிக்கை பின்வருமாறு அமைந்துள்ளன.*

| வ.எண் | வருணனை | ஒப்பீடு - 1 | ஒப்பீடு – 2 | ஒப்பீடு - 3 |
|---|---|---|---|---|
| 1 | உயர்திணை – 69 | உயர்திணை - 8 | உயிருள்ள அஃறிணை - 36 | உயிரற்ற அஃறிணை - 23 |
| 2 | உயிருள்ள அஃறிணை - 41 | உயர்திணை - 13 | உயிருள்ள அஃறிணை - 5 | உயிரற்ற அஃறிணை – 26 |
| 3 | உயிரற்ற அஃறிணை – 35 | உயர்திணை - 7 | உயிருள்ள அஃறிணை – 6 | உயிரற்ற அஃறிணை - 22 |

**இந்த ஒப்பீடுகளின் எண்ணிக்கை தரும் செய்திகள் வருமாறு**

*உயர்திணைக்கு உரியவரை உயர்திணைகளுடன் ஒப்பிடுவதைக் காட்டிலும் அஃறிணைகளுடன் அதிக அளவில் ஒப்பிடப்பட்டுள்ளன.*

*அஃறிணைகளுக்குரியவைகளை (உயிருள்ள/உயிரற்ற) அதிக அளவில் உயர்திணைகளுடன் ஒப்பிடப்பட்டுள்ளன.*

*அதே நேரம் அஃறிணைக்கு உயர்திணைக்குரியவர்கள் சற்று அதிக அளவில் ஒப்பிடப்பட்டுள்ளனர்*

*= உயர்திணை -உயிருள்ள அஃறிணை - உயிரற்ற அஃறிணை என்ற ஒப்பீடுகள் முறையே,*

*உயர்திணை =8:36:23*

*உயிருள்ள அஃறிணை =13:5:26*

*உயிரற்ற அஃறிணை =7:6:22 என அமைந்துள்ளன.*

**இந்த முடிவுகள் சில வினாக்களை முன்வைக்கின்றன.**

*உயர்திணைக்கு உயர்திணைக்குரியவரைவிட அஃறிணைக்குரியவை ஏன் அதிக அளவில் ஒப்பீடுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை ஆராயவுண்டியுள்ளது.*

*இது பற்றி ஆராய பதினெண்கீழ்கணக்கிலுள்ள பிற நூல்கள் ஆய்வுசெய்வது அவசியமாகிறது.*

*அத்துடன் சங்க இலக்கியங்கள் மற்றும் பக்தி இலக்கியங்களில் இவ்வாறான ஒப்பீடுகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை ஆராய்தால் மக்களின் மன நிலையில் ஏற்பட்ட மாற்றங்களை நாம் அறியலாம்.*

**பயன்பட்ட நூல்கள்**


*1. தொல்காப்பியம் செல்லதிகாரம், இளம்பூரணர் உரை, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூல் பதிப்புக் கழகம், 1982, சென்னை.*

1. *நன்னூல், மயிலைநாதர் உரை, முதல் பதிப்பு, உ.வே.சாமிநாதையர் பதிப்பு, 1918, சென்னை.*
2. *பதினெண் கீழ்கணக்கு நூல்கள், வித்துவான் துரை.இராசாராம் தெளிவுரை, 1995 (முதற்பதிப்பு), முல்லை நிலையம், சென்னை.*
3. *சிலப்பதிகாரம் மூலமும் உரையும், ந.மு.வேங்கடசாமி நாட்டார், ராமையா பதிப்பகம், சென்னை, 2010*
4. *அழகின் சிரிப்பு, பாரதிதாசன், நாம் தமிழர் பதிப்பகம், சென்னை, 2004*